20.03.2023
அசல் வழக்கு எண்: 271/2016

வா.சா.2 சாட்சி காசிமாயன் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நீதிமன்றத்தல் சாட்சியம் அளிப்பதற்கு அழைப்பாணை வந்ததா என்றால் வரவில்லை. வாதிகள் கேட்டுக்கொண்டதன் பெயரில் சாட்சியம் அளிக்கவந்துள்ளேன் என்றால் சரிதான். வாதிகள் எனக்கு என்ன உறவுமுறை என்றால் பங்காளி ஆவார்கள்.

வாதிகள் என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் நில பிரச்சனைக்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். தாவா சொத்து வாதிகளுக்கு பத்தியப்பட்டது சம்பந்தமான வழக்கா என்றால் ஆமாம். என்ன பரிகாரம் கேட்டு வாதிகள் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதிகள் எத்தனை இலக்க சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் 2 சொத்துக்களுக்கு தாக்கல் செய்துள்ளார்கள். 2 சொத்துக்களின் சர்வே எண் என்ன என்றால் சர்வே எண். 147/6A மற்றும் B ஆகும். மேற்படி சொத்துக்கள் வாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றும் அவர்களுக்கு தாவா சொத்துக்கள் வேண்டும் என்றும் வழக்கு தாக்கல் செய்துள்ளார்களா என்றால் ஆமாம்.

நாங்கள் எத்தனை வருடங்களாக கொக்குள கிராமத்தில் குடியிருந்து வருகிறேன் என்றால் நான் பிறந்ததிலிருந்து அங்குதான் இருந்து வருகிறேன். தாவா சொத்துக்களுக்கு பட்டா யாருடைய பெயரில் உள்ளது என்பதை பார்த்துள்ளேனா என்றால் மகாலிங்க கார்த்திக், கடற்கரை, கல்யாணி, முனியம்மாள் மற்றும் சுப்பிரமணி ஆகியோர்கள் பெயரில் பட்டா உள்ளது. மேற்கண்ட நபர்களுக்கு முன்பு யாருடைய பெயரில் பட்டா

இருந்தது என்றால் பாண்டி என்பவர் பெயரில் இருந்தது. பாண்டி என்பவரது பெயரில் எந்த வருடம் பட்டா இருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

என்னிடம் காட்டப்படும் எனது நிரூபண வாக்குமூலத்தை நான் வழக்கறிஞரிடம் விபரம் சொல்லிதான் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நிரூபண வாக்குமூலத்தில் தாவா சொத்து அம்மாச்சியார் திருகோவிலுக்காக ஊழியமானிபமாக சொத்து கொடுக்கப்பட்டது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்து மகாலிங்க கார்த்திக் வகையறாவுக்கு பாத்தியப்பட்டதா அல்லது கோவில் ஊழிய மானிப சொத்தா என்றால் தாவா சொத்துக்கள் அம்மட்சியம்மாள் கோவிலுக்கு பாத்தியப்பட்ட சொத்தாகும். கோவிலுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களுக்கு தனிப்பட்ட நபர் பெயரில் பட்டா மாற்ற முடியாது என்றால் சரிதான்.

தற்போது தாவா சொத்துக்களின் பட்டா கோவில் பெயருக்கு மாற்றப்பட்டுவிட்டது என்றால் சரிதான். தாவா சொத்து கோவிலுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்பதால்தான் பட்டா கோவில் பெயருக்கு மாற்றப்பட்டுள்ளது என்றால் சரிதான். பட்டா மாற்றப்பட்டது சரிதான் என்றாலும் அதில் எந்த தவறும் இல்லை என்றாலும் சரிதான். மேற்கண்ட விபரங்கள்தான் உண்மையான விபரங்கள் என்றால் சரிதான். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தும் வாதிகளுக்காக பொய்சாட்சியம் அளிப்பதற்காக சொல்லப்பட்ட விபரங்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்து வாதிகளுக்கு திருகோவில் பூஜை ஊழியம் செய்வதற்காக கொடுக்கப்பட்ட சொத்து என்று தவறாக நிரூபண வாக்குமூலத்தில் சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல.

தாவா சொத்து சம்பந்தமாக என்னென்ன வழக்குகள் என்னென்ன நீதிமன்றத்தில் நடைபெற்றது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எந்த

வழக்கில் வாதிகளுக்கு சாதகமாக தீர்ப்பு பெற்றுள்ளார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வாதிகள் மேற்படி கோவிலில் பூஜை செய்து வருகிறார்கள் என்பதாலும் எனக்கு உறவினர்கள் என்பதாலும் அவர்களுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. வாதிகளின் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டிய வழக்கு என்றால் சரியல்ல.